தமிழ்நாடு சட்டமன்ற பேரவை

புதன்கிழமை, 1974 மார்ச் 27.

சென்னை, செயின்ட் ஜார்ஜ் கோட்டையிலுள்ள சட்டப் பேரவை மண்டபத்தில் காலை 9 மணி அளவில் மாண்புமிகு பேரவைத் தலைவர் **புலவர் கா. கோவிந்தன்** அவர்கள் தலைமையில் பேரவை கூடியது.

1. நீத்தார் நினைவுக் குறிப்பு.

முன்னாள் உறுப்பினர் திரு. எல். சி. பைஸ் அவர்கள் மறைவு குறித்து.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: 1946-ஆம் ஆண்டு முதல் 1952 ஆம் ஆண்டு வரை மேற்கு கடற்கரை இந்திய கிறிஸ்துவர்கள் தொகுதியிலிருந்தும், பின்னர் 1952-ஆம் ஆண்டு முதல் 1956-ஆம் ஆண்டு வரை மங்களூர் தொகுதியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அன்றைய ஒருங்கிணைந்த சென்னை சட்டப் பேரவையின் உறுப்பினராக இருந்த திரு. எல். சி. பைஸ் அவர்கள் 22—3—1974-ம் நாளன்று மறைந்ததைக் குறித்து இப்பேரவையின் சார்பில் இரங்கலையும் ஆழ்ந்த வருத்தத்தையும் அன்னாரை இழந்துவிட்ட குடும்பத்தினருக்கு நான் தெரிவித்துக் கொள்கிறேன்.

மறைந்தவருக்கு மரியாதை அளிக்கும் வகையில் மாண்புமிகு உறுப்பினர்கள் ஒரு நிமிடம் மவுனமாக நிற்கும்படி வேண்டிக் கேட்டுக் கொள்கிறேன்.

(மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரும் ஒரு நிமிடம் மவுனமாக எழுந்து நின்றனர்.)

2. வினாக்கள்-விடைகள்.

வெள்ளிக்குறியிட்ட வினாக்கள்.

SHORT NOTICE QUESTION.

Industrial Dispute in Textile Mills.

*2 *S.N.Q.*—THIRU A. SUBRAMANIAM: Will the Hon. the Minister for Labour be pleased to state—

(*a*) the names of textile mills in the State which have not so far accepted the terms of the industry-wise Settlement of 28th February 1974 in toto;